புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# மாமன்னன் (கல்வெட்டு) மாமன்னன் (திரைக்கதை) : காந்தளூர் சாலை, கோச்சிங் சென்டர் அழித்தொழிப்பில் பண்பாட்டு முரண்கள்

முனைவர் சு. சிவசந்திரகுமார்
உதவிப் பேராசிரியர்
தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் - 635 601

ஆய்வுச் சுருக்கம்

கல்வி நிலையங்களின் மீதான தாக்குதல்கள் புனைவுகளிலும் யெதார்த்ததிலும் வரலாறு நெடுக நிகழ்ந்துள்ளன. அத்தகைய நிகழ்வுகளை எடுத்துக் கொண்டு ஆய்தல் என்ற அடிப்படையில் இராஜராஜன் காந்தளூர் சாலையை அழித்த நிகழ்வும் மாமன்னன் திரைப்படத்தில் பயிற்சி மையம் அழிக்கப்பெறும் நிகழ்வும் ஒப்பிடப்படுகின்றன. இவ் ஒப்பீட்டின் மூலம் தலைமைத்துவங்கள் வாழ்விச்சை உணர்ச்சியில் முடுவெடுக்கும் சூழலில் தொலைநோக்குப் பார்வையைக் கணக்கில் கொள்வதில்லை என்பதைக் கருதுகோளாக்கியுள்ளது இக்கட்டுரை.

குறிச் சொற்கள் மாமன்னன், காந்தளூர் சாலை, பயிற்சி மையம், பண்பாட்டு முரண், தலைமைத்துவம்.

## முன்னுரை

மாமன்னன் இராஜராஜன் காந்தளூர் சாலையை அழித்தொழிக்கின்றான். மாமன்னன் திரைப்படத்தில் பயிற்சி மையம் அடித்து நொறுக்கப் படுகின்றது. முன்னது ராஜராஜனின் வாழ்வியல் நிகழ்வு அல்-புனைவு. பின்னது படைப்பாளி உருவாக்குவது புனைவு. இவ்விரு மனங்களையும் இணைநிலை நோக்கில் அணுகின்றபோது 1300 வருட இடைவெளியில் தன்னிலை மனம் சிறப்பாகச் செயல்படுவதற்கான சூழலை இழந்த காலமாகத் தற்காலம் காணப்படுகின்றது. இருப்பினும் இவ்வகையான உந்துதலுக்குத் தன்னிலை மனங்கள் குழு சார்ந்து இயங்கும் போது அவற்றை ஒதுக்கித் தள்ளும் கும்பல் கலாச்சாரத்தின் எண்ணப் போக்கு ஏற்கும் படியானதாக இல்லை. அத்தகைய எண்ணப்போக்குகளை மாற்றும் கல்விக்கூடங்கள் தொடர்ந்த தாக்குதலுக்கு உள்ளவதற்கு மனித வாழ்விச்சை உணர்ச்சி சமூகத்துடன் ஒன்ற மறுக்கும் தன்னிலை காரணிகளாகின்றன. இத்தன்னிலைகளைப் அல்-புனைவு , புனைவு சார்ந்து ஒப்பிடுகையில் பண்பாட்டுடன் இணைய மறுப்பதற்கான காரணம் வினாவாக எடுத்துக் கொள்ளப் படுகின்றது. மனித தன்னிலை வாழ்விச்சை உணர்ச்சியின் காரணமாகத் தொலைநோக்கு இல்லா முடிவெடுப்பதாலே பண்பாட்டு மனத்துடன் இணைய மறுக்கின்றது என்பதை எடுத்து சொல்வதையே இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மாமன்னன் (கல்வெட்டு கி. பி. 988) காந்தளூர் சாலை :

“சாலை கலமறுத்தளிய கோராஜகேசரி வன்மரான ஸ்ரீ ராஜராஜ தேவன்” என்றும் “காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளிய ஸ்ரீ ராஜராஜ தேவன்” என்றும் இரண்டு விதமாகக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. காந்தளூர் சாலையை மன்னன் கலமறுக்க இருவேறு காரணங்களை ஆய்வாளர்கள் முன்மொழிகின்றனர்.

*எம்.ஜி.எஸ். நாராயணன் : எழுதியுள்ள ‘ Bachelors of Science’ எனும் கட்டுரையில் சட்டர்களுக்கு (பிராம்மண மாணவர்களுக்கு) “த்ரை ராஜ்ஜிய வ்யவஹார” (மூவேந்தர் ஆட்சிப் பகுதிகளின் நிர்வாகம்) குறித்த கல்வியும், போர்ப் பயிற்சியும் வழங்குகின்ற ஒரு நிறுவனம் (கல்விச் சாலை) ஆகும் என்று குறிப்பிடுவார். (மன்னர் மன்னன். இரா., இராஜராஜ சோழன் ., ப. 235) இச்சாலைகளுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் உடையார்குடி அந்தணர்கள் அவர்கள் இராஜராஜனின் அண்ணனான ஆதித்த கரிகாலன் அரசவையேறலை விரும்பாமல் குறுநில மன்னர்கள் உதவியுடன் கரிகாலனைக் கொன்றவர்கள் உடையார்குடி அந்தணர்கள் ஆவார்கள். அவர்களையும் அவர்தம் குழந்தைகள், வயதானவர்களை உடுத்திய ஆடைகளுடன் கால்நடையாக நடத்தி – நாடு கடக்கும்படி செய்தான் இராஜராஜன். இதனை, மெய்பிக்கும் ஒரே சான்று உடையார்குடி, அனந்தீஸ்வரம் திருக்கோயிலின் விமான மேற்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள இராஜராஜரின் இரண்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டு (Epigraphia Indica, Vol 21, No 27) என்கிறார். (மேலது ப. 244)*

*எஸ். இராமச்சந்திரன் : கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவரன் மாறனான பெரும்பிடுகு முத்தரையனின் சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலக் கல்வெட்டில் “ காந்தளூர் மண் தோற்ற வேந்தர் மனம்” என்ற வரி இடம்பெற்றுள்ளது. எனவே, கல்விச் சாலை வேந்தர்களுக்கானது என்பதாகக் கருத்துரைப்பார். (ஆவணம் 27, 2016 ப.327) வேந்தர்களுக்கான இச்சாலையை மன்னன் அழிப்பதற்குக் காரணம் அப்பகுதி “ சோகிரத்துப் பருடையாரும் நியாய சேகர்ராயின வள்ளுவரும் கூடிச் செய்த கச்சமாவது” எனக் குறிப்பிடுவதனால் அங்குள்ள நீதி நிர்வாகம் வள்ளுவர் குலத்தின் நெறிக்காட்டலில் உள்ளது என்பதாகிறது. எப்படியிருப்பினும் வாரிசுரிமைக்கு மாறுபட்ட ஒரு தேர்வுமுறை இங்கு நடைமுறையில் இருந்திருக்கின்றது. அதற்குத் தகுதியான நபர்களை உருவாக்கும் உயர்கல்வி நிறுவனமாக இதனைக் காண வேண்டுமென்பார். (மேலது ப.327) இதனடிப்படையில் பார்க்கின்றபோது தெய்வீக வாரிசுரிமையின் அடிப்படையில் மும்முடிச் சோழனாக முடிசூட முனைந்த ஒரு பேரரசனுக்கு அரச பதவிக்கான தேர்வு முறை என்பதே முரண்பாடான ஒன்றாகவும் அத்தேர்வில் கலந்து கொள்ள தகுதியானவர்களை உருவாக்குகிற ஒரு உயர்கல்விச் சாலை மிகப் பெரிய வில்லங்கமாகவும் தோற்றமளித்திருப்பின் வியப்பதற்கில்லை. எனவே தான் அக்கல்விச் சாலையைக் குறிவைத்துத் தாக்கி அழிக்க முனைந்திருக்கின்றான் என்கிறார். .(மேலது ப.328)*

*மாமன்னன் (திரைப்படம் - 2023) கோச்சிங் சென்டர்*

*அதிவீரனுக்குச் சொந்தமான இடத்தில் லீலா இலவச கல்வி மையம் ஒன்றை நடத்துகிறார். அதற்கு அழகம் பெருமாள் (பாசில்) அண்ணன் இடையூறு செய்யவே, பஞ்சாயத்துப் பேசுவதற்குச் செல்கிறார் மாமன்னன் அங்கே அவர் அவமானப்படுத்தப்படுகிறார். கதை நகருகிறது. இங்கே பயிற்சி மையம் கணக்கில் கொள்ளப் பெற வேண்டும். இலவச பயிற்சி மையத்தால் தனது கல்வி நிலையத்தின் வருமானம் பாதிக்கிறது என்பதே ஆதிக்கதினர் ஆதங்கம். கதையமைப்பில் பயிற்சி மையம் ஒரு தனிப்பட்ட குழுவிற்கானதாகக் காட்டப்படவில்லை. வர்க்க அடிப்படையிலான குழுவாகப் பயிற்சிக் குழு அமைந்துள்ளது. கதையமைப்பில் ஆதிக்கத்தினருக்கு வருமானம் தராத கல்விச் சாலையைக் காயப்படுத்துவது மட்டுமே நோக்கமாக இருக்கின்றது. இவ்விடத்தில் கல்வி பணமாகப் பார்க்கப்படுகின்றது. அதிகாரமாகக் காட்டப்படவில்லை. இக்கதையமைபை நகர்த்தும் இயக்குநர் மாரி செல்வராஜின் நாயக்கர்கள் முறையே பரியேறும் பெருமாள் , கர்ணன் , அதியனை ஒப்பிடுகையில் படிப்பவன், போராடுபவன், புரட்சி செய்பவன் இதை இப்படியும் சொல்லலாம். கற்பி , ஒன்றுசேர் , புரட்சி செய் என்றபடியிருக்கின்றனர். பண்பாட்டு அடிப்படையில் எங்கும் புகழ் மணப்பது போலவோ , கண்டா வரச் சொல்லுவது போலோ இல்லாமல் மலையில் தீ பிடிப்பதும் மனசுல வெடி வெடிப்பதும் அவர் கடந்து வந்த பாதையின் பக்குவங்களாகத் தெரிகின்றன. எங்கும் புகழ் மணக்கும் பாடல் தமிழ்ச் சினிமா இன்று வரைக் கண்டிறிராத அசல் பண்பாட்டு வெளி. கர்ணனின் நாதஸ்வர ஓசையும் அத்தகைத்தே. இவையாவும் இயக்குநரின் தன்னிலை உணர்விற்குப் பண்பாட்டுத் தடையில்லாக் காலமாகின்றன . ( அரங்க நலங்கிள்ளி., சங்க இலக்கியம் : ஒரு ஃபிராய்டிய வாசிப்பு .,ப. 233). இவ்விருப் படங்களின் விளைவு தமிழ் மண்ணின் கூட்டுநனவிலி கொடுத்த விளைவாக அமைந்துள்ளன. சமூக ஊடகங்களின் வழியே ஒவ்வொரு இனக்குழுவும் தங்களின் எதிர்ப்பார்ப்பினை உடனடியாக இட்டு நிரப்பின. சமூக*

*ஊடகங்களின் பங்களிப்புக் காரணமாக விளைவுகள் உடனடியாக இயக்குநர் மனத்தில் புற உலகின் விளைவுகளை ஏற்க செய்து தன்பசி, தன்காதல் என்னும் வாழ்விச்சை உணர்ச்சிகளை ஒடுக்குகின்றன. இந்நிலையில் தான், தனது என்னும் வாழ்விச்சை உணர்ச்சிகளைக் கைவிடும் போது பண்பாடு நடைமுறையாகின்றது. மனிதன் தன்னலத்தைத் துறப்பதென்பது அவன் தன்னைத் தானே வதைத்துக் கொள்ள தூண்டுவது அவனது தன்வதைப்பு மன உணர்ச்சிதான். மனிதனின் தன்வதைப்பு மனமே அவன் தனது இயற்கையான போராட்டவுணர்ச்சியிலிருந்து (Aggressive Instinct) மாறிப் பண்பாட்டு மனிதனாக வாழ வழிவகை செய்கின்றது. மனிதனிடம் நன்நடத்தை உருவாக்கம் (Character Formation) உயர் வழிப்பாடு (Sublimation) இச்சை உணர்வுத் துறப்பு (Instinctual Renunciation) ஆகிய மூன்றும் ஒன்றுசேரும் போது மனிதப் பண்பாடு நிலைபெறுகின்றது. இதற்குச் சாவிச்சை உணர்ச்சியின் ஒருபெரும் பிரிவான தன்வதைப்பு மனம் பெரும்பங்காற்றுகின்றது (சங்க இலக்கியம் : ஒரு ஃபிராய்டிய வாசிப்பு ப.263) இத்தன்வதைப்பு மனத்தின் அறுவடையாக மாமன்னனைச் சொல்லலாம்.*

*அழித்தொழிப்பில் பண்பாட்டு முரண்கள்*

*கல்வெட்டு மாமன்னனும் (கி.பி.10), திரைக் கதை மாமன்னனும் (கி.பி. 2023), சந்தித்துக் கொள்ளும் இடம் அலாதியானது. அருபமானதும் கூட. கல்வெட்டு மாமன்னன் அறச்சாலை அழிப்பதற்கான காரணம் புலப்படவில்லை. புனைவில் மாமன்னன் திரைக்கதை அறச்சாலை அழித்தொழிப்புக்குக் காரணம் ஆதிக்கத்தினருக்கு வருமானம் இல்லை என்பதே. கல்வெட்டு அல்-புனைவு, திரைக் கதை புனைவு இவ்விரண்டிலும் இளையோடும் சமூகம் எதார்த்தமானது. அதிகாரம் தரும் போதைக்கும் வாரிசு அரசியல் என்ற நோய்க்கு மாற்று மருந்தாகத் திகழ்ந்த ஒரு கௌரமான கல்விச் சாலை இருந்த இடம் தான் காந்தளூர். அதை தான் அரசன் அழித்தொழித்தான் என்பது வியப்பளிக்கின்றது. மன்னன் இராஜராஜனுக்குப் பின் வந்த மற்ற அரசர்களும் இதனை மெய்கீர்த்தியாக்கியுள்ளனர். அக்காந்தளூர் சாலையைச் சிறப்பாக நடத்திய வள்ளுவர் குலத்தைச் சரியாகக் கணித்த இராமச் சந்திரன் சோகிரம் என்பது சுகபுரத்தின் பழம் பெயர் என்பார். அவ்வூரின் பரிடையார் (பரிஷத் சபையார்) கோயிற் பூசகர்களான வைதீகர்களாக இருக்கலாம் என்கிறார். இஃது எப்படி ம. மதிவண்ணன் போன்ற ஆய்வாளர்கள் கண்களில் படவில்லை. அவர் திருப்பதி வெங்கடேஸ்வர பெருமாள் கோவிலில் உள்ள கல்வெட்டை வலிந்து பல்லவ பெற்(ப)கடையார் என்பதாகக் கொள்ளுகின்றார். (மதிவண்ணன்.ம., சக்கிலியர் வரலாறு., கருப்புப்பிரதிகள்-வெள்ளைக் குதிரை இணைந்த வெளியீடு., 2023 . ப. 285) அவரே பொன்னாணிக்கு அருகிலுள்ள சுகபுரம் தஷிணாமூர்த்தி கோயிலிற் பொறிக்கப்பட்டுள்ள கி.பி.9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த "சோகிரத்துப் பருடையாரும் நியாய சேகர்ராயின வள்ளுவரும் கூடிச் செய்த கச்சமாவது" என்பதாக இருக்கும் இக்கல்வெட்டைக் கண்டால் வள்ளுவ நாட்டுடன் இணைந்து வசதியாக இருப்பதால் மிகத் துணிந்து பரிடையார் என்பதைப் பகடையார் என்பதாகவே படித்திருப்பார். இக்கூட்டணியின் தலைமைத்துவ வகை மாதிரி தமிழ் நிலத்தின் மிகப்பழமையானது. புறம் 335 பாடலில் குறிப்பிடும் மாங்குடி மருதனார் பரிந்துரைக்கும் குடிகளுக்கு இணக்கமானது. ஆயின் காந்தளூர் சாலையில் என்னென்ன பாடங்கள் பயிற்றுவிக்கப் பெற்றிருக்கும் என்பதை பார்வதிவசேகரபுரம் சாலையில் பாடங்களாக தைத்திரியம், தலவாகாரம், பவிழியம் ஆகிய சமூகச் சட்டங்கள் (தர்மசூத்திர நூல்கள் ) கற்பிக்கப்பட்டுள்ளன. (ஆவணம் 27, 2016. ப. 322) இப்பாடங்களைக் கற்ற மாணவர்களே போட்டியில் வெற்றி பெற்று சேரமான் பெருமாளாகத் தெரிவு செய்யப்படுவர். சேர நாட்டின் அரசியல் தனித்தன்மைகள் பற்றி விவாதிக்கும் அறிஞர்கள் , கி. பி. 8-9 ஆம் நூற்றாண்டிலிருந்தே பொன்னாணியாற்றின் வடகரையிலுள்ள திருவாய் என்ற திவ்யதேசத்தில் 12 ஆண்டுகளுக்குகொருமுறை நிகழும் என்றும், வள்ளுவ நாட்டின் நாடு வாழி அல்லது நாடாள்வான் அப்போட்டிக்கு நடுவராகச் செயல்படுவான் என்றும் எழுதியுள்ளனர். (ஆவணம் 27, 2016. ப. 322)*

இத்தொகுப்புகளின் அட்டவணைப் பின்வருமாறு,

| வ.எண் | அழித்தொழிப்பு | காலம் | வகைமை | வடிவங்கள் | உள்ளடக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | இலவசப் பயிற்சி மையம் | கி.பி. 2023 | திரைக் கதை | கலை(புனைவு) | சூத்திரர் Xபஞ்சமர் |
| 2 | காந்தளூர் சாலை | கி.பி. 985-கி.பி.1010 | கல்வெட்டு | புறச் சான்று (ஆவணம்) | சத்திரியர் X ? |

அட்டவணையினை உற்று நோக்குகையில் கல்வியா? வீரமா? என்பது போன்று உள்ளது. தன்னிலை உணர்விலிருந்து பரியனையும் , கர்ணனையும் இயக்கும் மாரிசெல்வராஜ் குழு மனம் கொண்டியியங்குகின்றார். அவரே சாவிச்சை உணர்ச்சியின் ஒருபெரும் பிரிவான தன்வதைப்பு மனம் பெரும்பங்காற்றுகின்ற போது கும்பல் மனநிலையிலிருந்து மாமன்னனை உருவாக்குகின்றார். கொள்கையில் தளர்வதைக் குறித்த கருத்தாக்கம் அவரைப் பாதிக்கும் போது தன்வதைப்பு மனநிலையில் வென்றெடுகின்றார். மாமன்னனான இராஜராஜனோ வாழ்விச்சை உணர்விலிருந்து பகைமையை அறுத்த போதிலும் அவரின் தலைமைத்துவ மாதிரி கேள்விக்கு உட்படுத்தப் படுகின்றது. கல்வி நிலையம் அழிக்கப் படுதலே அக்கேள்விக்கான காரணமாகும்.

நிறைவுரை

கனிகொடுக்காத மரமேயாயினும் நிழல் கொடுக்க வேண்டுமாயின் தன் கீழ் மரத்தைத் தவிர மற்றதை அனுமதித்து தகவமைத்தல் நன்றன்று. மரங்கள் அப்படி செய்வதில்லை. அவற்றின் நுகர்வர் அப்படி வடிவமைக்கின்றோம் அல்லது தூண்டுகின்றோம் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். பகல்வெளியின் களைப்பை மட்டும் உணர்ந்து மரம் என்பது நிழலுக்கானது என்ற தட்டையான புரிதல் உடையவர் சரியான தலைமைத்துவத்தை அடையாளங் காண முடியாதவர்களாகின்றோம். பின்பற்றாளர்களாகவும் இருக்க தயங்குகின்றோம். பல்லுயிர் தொகுதியில் இருக்கும் மரங்களின், காடுகளின் நலனறிந்தவர்கள் மரத்தை நிழலுக்கு நாடாதிருப்பர். இது பண்பாட்டு மனதிற்கு சால பொருந்தும்.

ஆய்விற்கு உதவியன


1) அரங்க நலங்கிள்ளி., சங்க இலக்கியம் : ஒரு ஃபிராய்டிய வாசிப்பு, வாணிதாசன் பதிப்பகம், புதுச்சேரி, 2019.
2) ஆவணம் இதழ் 27, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 2016 .
3) மதிவண்ணன்.ம., சக்கிலியர் வரலாறு., கருப்புப்பிரதிகள்-வெள்ளைக் குதிரை இணைந்த வெளியீடு., 2023 .
4) மன்னர் மன்னன். இரா., இராஜராஜ சோழன் ,இன்றைய பொய்களும் நேற்றைய வரலாறும்., பயிற்று பதிப்பகம்.,சென்னை. ஜீன் 2022.


********* ********* ********** ********* ********* ********** ********** **********